நமது அம்மா
19/11/2018



## பிளாஸ்டிக் தடை:

# ஓட்டல் - திருமண மண்டப உரிமையாளர்களுடன் ஆலோசனை

சென்னை,நவ.19-

ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக் கூடிய பிளாஸ்டிக் பொருள்களுக்கு வரும் ஜனவரி 1-ஆம் தேதி முதல் தடை விதிக்கப்பட உள்ள நிலையில், அதுகுறித்த ஆலோசனைக் கூட்டம் சென்னையில் நடைபெற்றது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய கூட்டரங்கில் நடந்த இந்தக் கூட்டத்தில், சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட உணவு விடுதிகள், பெரிய அங்காடிகள், வணிக வளாகங்கள், திருமண மண்டப உரிமையாளர்களுடன் கலந்தாலோசனை நடந்தது. சுமார் 174 பேர் பங்கேற்றனர். தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய உறுப்பினர் செயலர் டி. சேகர் சிறப்புரை ஆற்றினார். அரசின் பிளாஸ்டிக் தடை பற்றியும், பிளாஸ்டிக் தடையை நடைமுறைப் படுத்துவதில் அனைத்து பங்குதாரர்களுக்கும் உள்ள கடமைகள் குறித்தும் எடுத்துரைத்தார். இந்தக் கூட்டத்தில், தடை செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் மாற்றுப் பொருட்கள் பற்றிய விளக்கப் படத்தை சுற்றுச்சூழல் இணை தலைமை பொறியாளர் ஏ. தங்கபாண்டியன் விளக்கினார். சுற்றுச்சூழல் பொறியாளர் ஏ.சாமுவேல் ராஜ்குமார், இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் ஜி.கோபாலகிருஷ்ணன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.